DEPOSITION OF WITNESS

( Chapter XXV Bharatiya Nagarik Suraksha Sanhita, 2023)

***

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE No.2 MADURANTAKAM

Calender : CC 185/2016

Miscellaneous :

Sessions : PW 1

Deposition of Witness for

**எதிரி ஆஜரில்லை எதிரி தரப்பில் 355 BNSS ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.**

| | |
|---|---|
| Name | கோவிந்தம்மாள் |
| Father / Husband Name | ராமசாமி |
| Village | |
| Taluk | |
| Age | |

Solemnly affirmed in accordance with the provision of Chapter X of Bharathiya Sakshya Adhiniyam, 2023, on the day of **28.08.2025**

**முதல் விசாரணை:**

1. நான் தற்போது அச்சிறுபாக்கத்தில் வசித்து கூலி வேலை செய்து வருகிறேன். வழக்கில் இறந்துபோன ராமசாமி எனது கணவர் ஆவார். கடந்த 12.11.2015 ம் தேதி இரவு 10.00 மணிக்கு என் கணவர் அவரது தங்கையின் ஊரான ஆத்தூர் டோல்கேட் சமத்துவபுரம் சென்றுவிட்டு சென்னை நோக்கி சென்ற சாலையை கடக்கும் போது திண்டிவனத்தில் இருந்து சென்னை நோக்கி சென்ற இனோவா கார் என் கணவர் மீது மோதி விபத்து ஏற்பட்டதாக தகவல் சொன்னார்கள். என் கணவரை மதுராந்தகம் அரசு மருத்துவமனையில் சென்று பார்த்தபோது தலை மற்றும் உடல் முழுவதும் அடிப்பட்டு இறந்த நிலையில் இருந்தார். என்னிடம் காட்டப்படும் புகாரில் உள்ள கையொப்பம் என்னுடையது தான் புகாரை நான்தான் கொடுத்தேன். **(அசா1 கொடுத்த புகார் அசாஆ1ஆக குறியீடு செய்யப்படுகிறது)** போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**குறுக்கு விசாரணை**

2. வழக்கு குறித்து எனக்கு தகவல் சொல்லிதான் தெரியும் என்றால் சரிதான். என் கணவரின் தங்கை மறுநாள் காலை சுமார் 8.00 மணிக்கு சொல்லிதான் எனக்கு தகவல் தெரியும். தட்டச்சு செய்யப்பட்ட புகாரில் உள்ள விவரங்கள் எனக்கு தெரியுமா என்றால் எனக்கு எழுத படிக்க தெரியாது. சம்பவத்தை பற்றி எனக்கு எதுவும் தெரியாது என்றாலும் போலிசார் சொல்லிதான் மேற்படி புகாரில் கையொப்பம் செய்தேன் என்றாலும் சரியல்ல. இந்த வழக்கு புணையப்பட்ட வழக்கு என்றால் சரியல்ல.